# அகமாந்தர்களின் மனவுணர்வுகளும் செயல்களும்

*முனைவர் ச. கந்தன்*
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை

மலர்: 11
சிறப்பிதழ்: 1
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2024
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7719

## முன்னுரை

*ஓர் அடிக்கருத்தைக் கட்டமைக்கப் பல குறிப்பொருள்கள் துணை நிற்குமென்றும் ஒரு தலைமைக் குறிப்பொருளின்கீழ் சில துணைமைக் குறிப்பொருள்கள் அமையும். அடிக்கருத்துக்கள் மாந்தர்களுடன்தொடர்புடையன, குறிப்பொருட்கள்சூழல்களுடன் தொடர்புடையன. இந்த கட்டுரையில் உடன்போக்கு என்னும் அடிக்கருத்து எப்படி அகமாந்தர்களுடன் இணைத்துப் புனையப் பட்டுள்ளது. அகமாந்தர்களின் உணர்வுகள் எவ்வாறு பின்னப் பட்டுள்ளன என்பனவற்றை விளக்கமாகக் காணலாம். இலக்கியம் என்பதே மனித உணர்வுகளையும் எண்ணங்களையும் மொழியின் கலைத் தன்மையுடன் நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் எடுத்துரைப்பதாகும். அத்தகைய அகமாந்தர்களின் மனவுணர்வுகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

## தலைவியின் நலம் புனைந்துரைத்தல்

*தலைவியைப் பாலை வழியில் உடன் அழைத்துக் கொண்டு செல்லும் தலைவன், அவளுடைய நாணமும், பெற்றோரைப் பிரிந்த துயரமும் அவளை விட்டு நீங்குவதற்காகத் தலைவியுடன் பேசிக் கொண்டே செல்வான். அப்போது “உன்னுடைய தமையன்மார் வில்லும் பகழியும் கொண்டு கொலைத் தொழில் புரிவதில் வல்லவராகத் திகழ்கின்றனர். நீயோ உன்னுடைய முலையாலும் அதன்மேல் படர்ந்த சுணங்காலும் என்னை வருந்துகின்றாய். ஆகையினால் என் நெஞ்சு உன் முலைமேல் படர்ந்த தேமலைப் பிற உயிர்களை வருத்தும் அணங்கு என்றே எண்ணுகின்றது (ஐங். 363) என அவளது அழகு நலனைப் பாராட்டி தலைவியின் நாணத்தையும் பெற்றோரின் பிரிவுத் துயரால் ஏற்பட்ட துயரினையும் தலைவன் மாற்றுகிறான். இதேபோன்று நற்றிணைப் பாடல் ஒன்றில் உடன்போக்கில் பாலைவழியில் பயணிக்கும் தலைவன் ஒருவன் தலைவியின் அழகை தன் நெஞ்சுக்கு உரைத்து மகிழ்கிறான்.*

*“பாதுகாப்பற்ற வழியினைக் கடந்து வேங்கை மலர்கள் உதிர்ந்து பரவிக் கிடக்கும் மலர்ப்பரப்பில் அன்னப்பறவை நடப்பது போல நடந்து வரும் தலைவியின் அழகை நான் கண்டு மகிழ்ந்தேன். நெஞ்சே! நீயும் வ்வழகைக் கண்டு மகிழ்வாயாக!” (நற். 384)என்று குறிப்பிடுகின்றது.*

தலைவியின் நடையழகைத் தலைவன் பலமுறை கண்டு மகிழ்ந்தவன் தான் என்றாலும் தனக்காகக் கொடிய கானகத்தின் வழியே தன்னுடன் இணைந்து இல்லறம் நடந்த வருகிறாளே என்ற பெருமித உணர்வின் காரணமாகப் பிறந்த உவகையினால் தலைவியின் நடையழகைத் தன் மனத்திற்குக் கூறி மகிழும் தலைவனது மனவுணர்வினை இப்பாடல்களில் காணமுடிகின்றது.

### என்றும் மாறாத தலைவனின் அன்பு

உடன்போக்கில் சென்று தன்னூரில் திருமணம் முடித்த பின்னர், தலைவியுடைய பெற்றோரைக் காண மீண்டும் பாலை நிலத்தைக் கடந்து அவளது இல்லம் திரும்பும் சூழலிலும் தலைவன் தலைவியை ஆற்றுவித்து அழைத்து வருகின்றான்.

உடன்போய் திருமணம் செய்து கொண்டு மீண்ட பிறகும் தலைவன், தலைவியின் நலனையே நாடுகிறான் என்று சொல்லப் பட்டுள்ளது. அதாவது, பாலை நிலத்தைக் கடந்து தலைவியை அவள் இல்லத்திற்கு அழைத்து வருகையில், கோடை வெயிலால் உலர்ந்த மூங்கிலினால் உண்டாகிய காட்டுத் தீயானது மலைக் குகைகளுக்குள் புகுந்து ஓசையினை எழுப்பும் கடத்தற்கரிய பாலைப் பரப்பினைக் கடந்து விட்டோம். இனி நாம் அருவி விழும் சோலைகள் சூழ்ந்த நாட்டுப் பகுதிக்குள் பயணிப்போம் வா, எனத் தெரிவித்து இனி நீ மகிழ்ச்சியாக மெல்ல மெல்ல நடந்து வருவாயாக (ஐங். 395) என்று கூறினாள். மற்றொரு பாடலில் தலைவன் தலைவியுடன் பும்பொழிலிலே தங்கியிருக்கும் பொழுது, நண்பகல் விருந்திற்கே நம்மூர் சென்று விடுவோம் (ஐங். 396)எனக் கூறுவதாக அமைகின்றது.

உடன்போக்கில் சென்றபொழுது தலைவிக்கு மெல்லடி நோகாமலும் தளர்வும் களைப்பும் ஏற்படாமலும் எப்படி அரவணைத்து அழைத்துச் சென்றானோ அவ்வன்பில் சிறிதும் மாற்றமின்றி உடன்போய் இருக்கின்ற நிலையிலும் அழைத்து வந்தான் என்பதை இவ்விரண்டு பாடல்களின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. இப்பாடல்கள் தலைவனின் மாறாத பேரன்பினை எடுத்து ரைக்கின்றன.

### நாணத்தைக் காமம் வெல்லுதல்

களவு வெளிப்பட்டதால் ஏற்பட்ட இடையுறுகளைக் கண்ட தோழி உடன்போக்கினை ஊக்குவித்தாள். சூழ்நிலைகளை ஆராய்ந்த தலைவன் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவனது இசைவைப் பெற்ற தோழி தலைவியிடம் தலைவனின் எண்ணத்தை உணர்த்தினாள். இச்சூழலில் தலைவி தனது உள்ளத்து உணர்வுகளைத் தோழியிடம் பகிர்ந்த கொள்ளும் நிலையில் குறுந்தொகைப் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

தலைவனின் விருப்பத்தைக் கேட்ட தலைவி "இதுநாள் வரை தன்னுள்ளே மறைத்து வைத்திருந்த நாணமானது, வெள்ளம் பெருகிய போது கரும்பிற்கு அமைக்கப்பட்ட சிறுகரை கரும்போடு அடித்துச் செல்லப்படுவது போல் என்னை விட்டுச் சொன்றது" எனக் கூறினாள் (குறுந். 149). இங்குத் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பானது நாணத்தைக் கரைத்துவிட்டது எனக் கூறுவதன் மூலம் இலைமறை காயாகத் தன் உடன்பாட்டையும் தலைவன் மீது தான் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினையும் தோழியிடம் எடுத்துரைத்தாள். இப்பாடலில் உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது. நாணத்தைக் காட்டிலும் கற்பு சிறந்தது என வாழ்ந்த பெண்மையின் உள்ளுணர்வினையும் மகிழ்ச்சியையும் அறிந்து கொள்ளலாம்.

"காமம் என்பது தனிமனித உள்ளத்துணர்வாகவும் சுயம் சார்ந்த வெளிப்பாடாகவும் அமைகின்றது. நாணம் என்பது மனிதனின் அடிப்படை உணர்வன்று. அது சமூகத்தோடு தொடர்புடைய சமூக உணர்வுகளுக்கான எதிர்வினையாக அமைகின்றது. குறுந்தொகையில் நாணம் என்பதற்கும் காமம்

*என்பதற்குமான முரண் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளது. தலைவி எனும் பாத்திரத்தின் மனதுக்குள் இழுவிசையாக காமும் நாணமும் கூறப்பட்டுள்ளன. தலைவி காமத்தின் பக்கம் நிற்பதா? அல்லது நாணத்தின் பக்கம் நிற்பதா? காமத்திற்கும் நாணத்திற்குமான முரண் நிறைய அகப் பாடல்களிலுள்ளது" என்னும் பேராசிரியர் பா. ஆனந்தகுமாரின் கருத்து இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.*

**தொலைந்த அழகிற்கு வருந்தாதே தோழி!**

*திருமணம் தனது வீட்டில் நடைபெற வேண்டுமென்று விரும்பிய தலைவியின் எண்ணத்தைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட தலைவன், மீண்டும் பாலை வழியினைக் கடந்து தலைவியை அவன் இல்லத்திற்கு அழைத்து வந்தான். வந்தவர்களை இல்லத்தார் நன்முறையில் வரவேற்றுப் போற்றினர். அச்சமயம் தோழி வழிநடை வருத்தத்தால் தலைவி வாட்ட மடைந்திருந்தலைக் கண்டு பலமுறை சுட்டிக் காட்டி ஆற்றாது புலம்பினாள். அதனைக் கண்ட தலைவி தோழியை நோக்கி,*

***"வேய் வனப்பு இழந்த தோளும் வெயில்தெற***
***ஆய்கவின் தொலைந்த நுதலும் நோக்கிப்***
***பரியல் வாழி தோழி பரியின்***
***எல்லையில் இடும்பை தருஉம்***
***நல்லவரை நாடனொடு வந்தமாறே"***

***(ஐங். 392).***

*என்கிறாள். உன் புலம்பலைத் தலைவர் கேட்டால் மிகவும் வருத்தம் கொள்வார். இதனால் எல்லையில்லாத துன்பமே இங்கு நிகழும் என்பதைத் தோழிக்கு உணர்த்தி, அமைதியாய் இரு என அவளைக் கடிந்தாள். மேலும், அவளது வருத்தத்தையும் தணிவிக்கும்படிக் கூறினாள். இப்பாடலில் தலைவியின் குறிப்பறிந்து அவளது இல்லத் திற்கு அழைத்து வந்த தலைவனின் பெருமித உணர்வையும், தோழியின் வினாவினைத் தலைவன் கேள்வியுற்றால் அவன் உள்ளம் துன்புறுமே என்ற தலைவியின் பக்குவப்பட்ட மனநிலையினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.*

**முடிவுரை**

*உடன்போக்குத்துறையில் தலைவர், தலைவி ஆகிய இருவரும் உடன்போக்கு எனும் அடிக்கருத்தின் அடித்தளமாக அமையும் முதன்மைக் கதைமாந்தர் ஆவர். தலைமக்கள் வாழ்வில் போக்கினை நேர்வித்து அனைத்து நிகழ்வுகளையும் இயக்கும் பாத்திரமாகத் தோழி திகழ்கிறாள். உடன் போக்கிற்குப் பின் அதன் விளைவுகளை எதிர்கொள்கின்ற அகமாந்தர்களாகச் செவிலியும் நற்றாயுமே அமைகின்றனர். உடன்போக்கினைச் சமூகம் சார்ந்து வாழ்வியல் நோக்கில் ஆராய்ந்த, தலை மக்களைப் போக்கில் கண்டு மகிழ்ந்து, வழி நடத்தியும் ஆற்றாது புலம்பும் தாயரிடம் உலகியல் தன்மையினை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.*